**செய்தி வெளியீடு எண்: 24/2022** **நாள்: 31.03.2022**

## பத்திரிக்கை செய்தி

## மார்ச் மாதத்தில் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 796 நபர்கள் பயணடைந்தனர்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், எம்.ஜி.எம் மருத்துவமனையுடன் இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாமை மெட்ரோ இரயில் நிலையங்களில் நடத்தி வருகிறது.

2022, மார்ச் மாதத்தில் மெட்ரோ இரயில் நிலையங்களில் 14 நாட்கள் நடைபெற்ற இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் உட்பட சுமார் 796 நபர்கள் பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார முகாமில் பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை), இரத்த அழுத்தம், சீரற்ற இரத்த சர்க்கரை, வெப்பநிலை மற்றும் ஆலோசனைகள் போன்றவை வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி தொடர்ந்து நடத்தவிருக்கிறது.

| தேதி | மெட்ரோ இரயில் நிலையம் | நேரம் |
|---|---|---|
| 02.04.2022 (சனிக்கிழமை) | நந்தனம் மெட்ரோ | காலை 8 மணி முதல் 11 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை |
| 04.04.2022 (திங்கள்கிழமை) | செனாய் நகர் மெட்ரோ | |
| 06.04.2022 (புதன்கிழமை) | தியாகராயா கல்லூரி மெட்ரோ | |
| 08.04.2022 (வெள்ளிக்கிழமை) | திருமங்கலம் மெட்ரோ | |
| 11.04.2022 (திங்கள்கிழமை) | அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ | |
| 13.04.2022 (புதன்கிழமை) | அண்ணா நகர் கோபுரம் மெட்ரோ | |
| 15.04.2022 (வெள்ளிக்கிழமை) | அசோக் நகர் மெட்ரோ | |
| 19.04.2022 (செவ்வாய்கிழமை) | ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ | |
| 21.04.2022 (வியாழக்கிழமை) | விமான நிலையம் மெட்ரோ | |
| 23.04.2022 (சனிக்கிழமை) | மீனம்பாக்கம் மெட்ரோ | |
| 25.04.2022 (திங்கள்கிழமை) | தேனாம்பேட்டை மெட்ரோ | |
| 27.04.2022 (புதன்கிழமை) | அரசினர் தோட்டம் மெட்ரோ | |
| 29.04.2022 (வெள்ளிக்கிழமை) | நங்கநல்லூர் சாலை மெட்ரோ | |

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**